**குறும்படப்போட்டி**: பல்கலைக்கழக மாணவர்களிடையே இணையவழி பாலியல் சுரண்டல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

**கருப்பொருள்**: "பல்கலைக்கழகங்களுக்குள் இணையவழி பாலியல் சுரண்டலை தடுப்பதோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகாரம் அளிப்போம்"

## நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்

**பங்குபற்றுவதற்கான தகுதி**: பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி கற்கின்ற இளங்கலை மாணவர்கள்

**கவனிக்க வேண்டியவை:**

- சமர்ப்பிப்புகள் மாணவரது வாழ்வைப் பாதுகாக்கும்பொருட்டு, இணையவழி குற்றங்களைத் தடுப்பது மற்றும் எதிர்கொள்வது என்ற கருப்பொருளைக் கொண்டிருக்க வேண்டும்

- திரைப்படங்கள் அதிகாரமளித்தல், விழிப்புணர்வு மற்றும் இது போன்ற பிரச்சனைகளைக் கையாள்வதற்கான உத்திகள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்

**திரைப்படக் கால அளவு** : கிரெடிட்கள் உள்ளடங்கலாக அதிகபட்சமாக 5 நிமிடங்கள் காலஅளவைக் கொண்டிருக்க வேண்டும்

**உள்ளடக்க வழிகாட்டுதல்கள்:**

- திரைப்படங்கள் பேசுபொருள் மட்டில் உணர்திறன் கொண்டதாகவும் சாதகமான அதிகாரமளிக்கும் செய்தியை ஊக்குவிப்பதாகவும் இருக்க வேண்டும். இருப்பினும், முக்கியமான பேசுபொருளினைக் கவனமாகவும் மரியாதையாகவும் கையாள வேண்டும்.
- இணையவழியிலான பாலியல் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடிய முறைகள் வளங்கள் மற்றும் ஆதரவு என்பவற்றைக் காட்சிப்படுத்தல் வேண்டும்.
- அடையாளங் காணக்கூடிய சம்பவங்கள் அல்லது நபர்களைப் பற்றிய குறிப்புகள் இருக்கக் கூடாது. திரைப்படத்தில் வரும் அனைத்துக் கதாபாத்திரங்களும் சம்பவங்களும் கற்பனையானவை என்றும் உண்மையான சம்பவங்களை அல்லது நபர்களைக் குறிப்பிடவில்லை என்றும் ஒரு நிபந்தனை இருக்க வேண்டும்.
- நிறுவனம் என்ற வகையில் பல்கலைக்கழகத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு காட்சியும் இடம்பெறக்கூடாது.
- அனைத்து சமர்ப்பிப்புக்களும் பங்கேற்பாளர்களால் உருவாக்கப்பட்ட அசல் படைப்பாக இருக்க வேண்டும். திருட்டுத்தனம் தகுதியிழப்புக்கு வழிவகுக்கும்.
- படைப்பாளர்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் பாத்திரங்களை படமாக்கியோ ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவற்றைப் பயன்படுத்தியோ அல்லது அனிமேஷன் காட்சிகளாகவோ பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றார்கள்.

- படைப்பாளிகள் தங்கள் படங்களில் அடையாளங்காணக்கூடிய கதாபாத்திரங்களைப் (வாழும் தனிநபர்கள்) பயன்படுத்தினால் அவர்கள் அவ்வாறு சித்தரிக்கப்படும் நபர்களிடம் முன் ஒப்புதல் பெற வேண்டும்.
- படத்தில் பயன்படுத்தப்படும் மூன்றாம் தரப்பு உள்ளடக்கத்தின் அனைத்து ஆதாரங்களையும் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

**தொழிநுட்பக் குறிப்புக்கள் :**

- காலம் : 3 முதல் 5 நிமிடங்கள்
- வீடியோ வடிவம் : உயர் வரையறை (HD) குறைந்தபட்சம் 720 p
- தோற்ற விகிதம் : 16:9 விரும்பத்தக்கது
- கோப்பு வடிவம் : MP4
- மொழிகள் : ஆங்கிலம், சிங்களம், தமிழ்
- தமிழ் அல்லது சிங்கள மொழிகளிலான கதைகளுக்கு, பலதரப்பட்ட பார்வையாளர்களின் அணுகல் மற்றும் புரிதல் என்பவற்றை முன்னிட்டு ஆங்கில உபதலைப்புகள் தேவை.

**சமர்ப்பிக்கும் செயல்முறை :**

- உங்கள் திரைப்படத்தை Google Drive folder இல் பதிவேற்றி, இணைப்பை எடிட்டர் சலுகைகளுடன் sgbvc@gs.pdn.ac.lk எனும் முகவரியில் **31.10.2023** அன்று அல்லது அதற்கு முன்பாகப் பகிரவும்.

**மதிப்பீட்டு அளவுகோல்கள் :**

- கருப்பொருள் மற்றும் போகஸ் உடன் ஒருங்கிணைப்பு
- புதுமையான கதைசொல்லல், படைப்பு வெளிப்பாடு மற்றும் தயாரிப்புத்தரம்
- நோக்கமுடைய செய்தியைத் தெரிவிப்பதில் ஒட்டுமொத்தத் தாக்கம் மற்றும் செயல்திறன்

**மதிப்பீட்டு செயன்முறை :**

- நிபுணர் குழுவினால் ஆரம்பத்தில் குறுகிய தெரிவுப் பட்டியல் தயார் செய்யப்படும்
- அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட வீடியோக்கள் மாணவர் வாக்களிப்பின் பொருட்டு SGBVC YouTube சேனலில் வெளியிடப்படும். வாக்களிப்புகளின் அடிப்படையில் 30% புள்ளிகள் வழங்கப்படும்.
- நிபுணர்களான நீதிபதிகள் குழுவினலால் 70% மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**மேலதிக விசாரணைகளுக்கு** sgbvc@gs.pdn.ac.lk ஐத் தொடர்புகொள்ளவும்

**தொலைபேசி & வாட்ஸ்அப் :** 0771534879